1981 ஏப்ரல் 24]

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்மா தமிழர்களுக்கும், மற்ற ஏழைகளுக்கும் பட்டுக்கோட்டையில் பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கேட்டிருக்கிறார்கள். இதைப்போல மற்ற இடங்களில் எங்காவது கேட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற குறிப்பின் படி தம்பிக்கோட்டையில் இருக்கிற பர்மா தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிலங்களுக்கு பாசனவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொள்கை அளவிலே பாசனத்துறை கொடுக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறது. அதற்கான ஒரு திட்டத்தைக் கூட தயாரித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்தவுடனே அங்கே அதை செய்யவிருக்கிறோம். இதுபோல் வேறு பகுதிகளில் அவர்களுக்கு அது தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஏனாதி, தேளி கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டம்.

*வினா எண் 867—திரு. க. பரமலை: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் ஏனாதி, தேளி போன்ற கிராமங்களுக்கு வைகை நீர்ப்பாசன வசதி கிடைக்காததால் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: உலக வங்கி தீர்வாங்க அறிக்கையின்படி (World Bank Appraisal report) பெரியாறு-வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டத்தில் விரிவாக்கப் பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட பகுதியில், ஏனாதி மற்றும் தேளி கிராமங்கள் இல்லை.

திரு. க. பரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த கேள்வி போட்டதற்குப் பின்னாலே, ஒரு துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சொல்லுகிறபோது இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் ஒரு விண்ணப்பம் கொடுத்ததின் பேரில் அங்கு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் 'பீசிபிளிட்டி' இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்த பின்னால் அதையும் சேர்த்து அமுல்படுத்த மைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த வேண்டுகோளின் மீது பதினைந்து நாட்களுக்குள்ளாக அறிக்கை வேண்டுமென்று கேட்டு, அந்த அறிக்கையினைப் பெற்று, புதிதாக உலக வங்கி மற்றும் இந்திய அரசு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தி ஒரு செயற்குறிப்பை அரசு தயாரித்துள்ளது. அதை உலக வங்கி ஏற்றுக்கொண்ட பிறகு ஏனாதி கிராமம் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள்ளே கொண்டு வரப்பட்டு மூன்று கண்மாய்கள் அதற்கு கீழே 269.87 ஏக்கர் பயன் அடைவதற்கான வாய்ப்பை தயார் செய்திருக்கிறது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நீர்ப்பாசனத்தில் விடப்பட்டிருக்கிற ஆயக்கட்டு பகுதிகளிலே, ஆர்.எஸ். மங்கலம் போன்ற இடங்களை இந்த திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கு உலக வங்கியுடன் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## குமரி மாவட்டத்தில் மாம்பழத்து அணை கட்டும் திட்டம்

* வினா எண் 868—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் வில்லுக்குறிக்கு வடக்கே உள்ள மலைப்பகுதியில் மாம்பழத்து அணை என்ற புதிய நீர்த்தேக்கம் ஒன்று கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?